

ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில் நடைபெற்ற கலைஞரின் கனவு இல்ல திட்டம் மூலம் வீடுகள் கட்டுவதற்கான ஆணையை வழங்கும் நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி மாற்றுத்திறனாளிகள் இருக்கும் பகுதிகளுக்குச் சென்ற ஆணையை வழங்கியதோடு அவர்கள் வாழ்வாதாரம் உயர துணையாக இருப்பேன் என வாழ்த்தினார். உடன் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி. செந்தில்குமார், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மொ.ந.பூங்கொடி, திட்ட இயக்குநர் திலகவதி, ஒன்றியப் பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# மாற்றுத்திறனாளிகளின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர் கலைஞர்

## ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில் - அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

திண்டுக்கல், ஆக.19- மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை காப்பாற்றி மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்று ஆத்தூர் தொகுதியில் கலைஞரின் கனவு இல்லத் திட்டம் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கு ஆணையை வழங்கிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த அயராது பாடுபட்டு வருபவர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 22 கிராம ஊராட்சிகளில் குடிசை வீடுகளில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு பயன் பெறும் வகையில் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் உள்ள 24 கிராம ஊராட்சிகளில் வசிக்கும் 853 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்ல திட்டம் மூலம் வீடுகள் கட்டுவதற்கான ஆணையை வழங்கிவிட்டு மாற்றுத்திறனாளிகள் வீடுகள் கட்டுதவற்கான ஆணையை பெறுவதற்காக காத்திருந்த பகுதிக்கு வந்த ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் நன்றி தெரிவித்து சால்வை அணிவித்தனர். அமைச்சர் அவர்களுக்கு சால்வை அணிவித்து வாழ்த்தியதோடு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது உடல் குறையை வைத்து கேலி செய்தவர்களை அவர்கள் கேலி செய்யாத வண்ணம் மாற்றுத்திறனாளிகள் என்று அழைக்க செய்தார். இது தவிர அவர்களுக்கு 100 நாள் வேலை திட்ட சலுகை, அரசு பணியில் முன்னுரிமை உட்பட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தினார். திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற உடன் மாற்றுத் திறயனாளிகளுக்கு தமிழக அரசு வழங்கி வந்த உதவித்தொகையை நிறுத்தியதோடு 100 நாள் வேலைதிட்ட பயனாளிகளில் முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கினார். இது தவிர அரசு வேலை வாய்ப்பிலும், தனியார் வேலைவாய்ப்பிலும் முன்னுரிமை கொடுக்க செய்ததால் இன்று மாற்றுத்திறனாளிகள் பலர் அரசு வேலைவாய்ப்பில் சாதனை படைத்து வருகின்றனர். சிறப்பு செயலாக்க திட்ட அமைச்சரும் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் பலரை விளையாட்டு துறையில் சாதனை படைக்க செய்து வேலைவாய்ப்பும் வழங்கி வருகிறார் என்றார். அதன் பின்னர் மாற்றுத்திறனாளிகளுக்கு வீடுகள் கட்டுதவற்கான ஆணையை வழங்கியதோடு வீடுகள் கட்டும் போது நிதிபற்றாக்குறை ஏற்பட்டாலும் உதவி செய்வதாக உறுதி அளித்தார். அப்போது மாற்றுத்திறனாளிகள் அமைச்சர் பெரியசாமி அவர்களின் கையை பிடித்து கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர்.

நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார், மாவட்ட ஆட்சியர் மொ.ந. பூங்கொடி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திலகவதி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், ஆத்தூர் முருகேசன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பாஸ்கரன், ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவே கானந்தன், பஞ்;சம்பட்டி மணி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், அகரம் பேரூராட்சி மன்றத்தலைவர் நந்தகோபால், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.புதுக்கோட்டை ரமேஷ், மாணவரணி அமைப்பாளர் செல்வம், ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் கதிரையன்குளம் பாலன், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் கோனூர் திருப்பதி, காளீஸ்வரி மலைச்சாமி,

ஜஸ்டின் மைக்கேலம்மாள், சுமதி கணேசன், விவேகானந்தன், தருமத்துப்பட்டி பிரபாகரன், ஊராட்சி மன்ற தலைவர்கள் அனுமந்தராயன் கோட்டை நிர்மலா இன்பராஜ், கோனூர் வெள்ளைத்தாய் தங்கபாண்டியன்,புதுச்சத்திரம் லெட்சுமி, சில்வார்பட்டி தனலெட்சுமி ராமமூர்த்தி, கே.புதுக்கோட்டை மன்மதன் என்ற காமாட்சியப்பன், கொத்தப்புள்ளி ஊராட்சி மன்ற தலைவர் சுந்தரி அன்பரசு, துணைத்தலைவர் எம்.வி.ரெங்கசாமி, ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தை சேர்ந்த தி.மு.க.நிர்வாகிகள் புதுப்பட்டி உதயகுமார், சக்கரவர்த்தி மணிமாறன், செல்வம், அனுமந்தராயன்கோட்டை ராஜாமணி, முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் கொம்பன் என்ற பாலசுப்ரமணி, உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

# கதிர் ஆனந்த் எம்.பி. வாக்காளர்களுக்கு இன்று நன்றி தெரிவிக்கிறார்!



மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்ற தொகுதியில் வெற்றி பெற்றுள்ள கதிர் ஆனந்த் எம்.பி. (19.08.2024, திங்கள் கிழமை) கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

**வேலூர் மாவட்டம்**
**குடியாத்தம் சட்டமன்றம் குடியாத்தம் தெற்கு ஒன்றியம்**

| ஊராட்சி | நன்றி தெரிவிக்கும் இடம் | நேரம் காலை |
|---|---|---|
| உள்ளி | ஆத்தோரம்பட்டி | 8.00 மணி |
| சின்னதோட்டாளம் | சின்னதோட்டாளம் | 8.30 மணி |
| குளிதிகை | சாந்திநகர் | 9.00 மணி |
| கீழ்பட்டி | பேருந்து நிறுத்தம் (மேல்பட்டி ரோடு) | 9.30 மணி |
| வளத்தூர் | பேருந்து நிறுத்தம் (மேல்பட்டி ரோடு) | 10.00 மணி |
| கருணீகசமுத்திரம் | பேருந்து நிறுத்தம் (மேல்பட்டி ரோடு) | 10.30 மணி |
| எர்த்தாங்கல் | கெங்கையம்மன் கோயில் அருகில் | 11.00 மணி |
| | **குடியாத்தம் மேற்கு ஒன்றியம்** | |
| சேம்பள்ளி | பஸ் நிலையம் | 11.30 மணி |
| அக்ராவரம் | பிள்ளையார் கோயில் பஸ் நிலையம் | 11.45 மணி |
| பெரும்பாடி | பெரும்பாடி பஸ் நிலையம் | 12.00 மணி |
| மூங்கப்பட்டு | மூங்கப்பட்டு | 12.15 மணி |
| சீவூர் ஊராட்சி | நேரு நகர், ஆலியார் தெரு | 12.30 மணி |
| | **குடியாத்தம் நகரம்** | |
| குடியாத்தம் நகரம் | நான்கு முனை கூட்ரோடு | மாலை 4.00மணி |
| | சித்தூர் கேட் | மாலை 4.30மணி |
| | கோபாலபுரம் மஜித் அருகில் | மாலை 5.00மணி |
| | நெல்லூர்பேட்டை காந்தி சிலை அருகில் | மாலை 5.30மணி |
| | அண்ணாசிலை அருகில் | மாலை 6.00 மணி |
| | பழைய பேருந்து நிலையம் | மாலை 6.30 மணி |
| | ஆர்.எஸ். சாலை, அம்பேத்கர் சிலை அருகில். | மாலை 7.00மணி |



நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் நெல்லை மண்டலம் வார்டு 25க்கு உட்பட்ட தமிழ்ச் சங்க தெரு, அண்ணா தெரு, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தெரு,மார்க்கெட்,நான்கு ரதவீதி சுடலைமாடன் கோவில் தெரு, அப்பர் தெரு,சத்தியமூர்த்தி தெரு தெப்பக்குளம் தெரு,வலம்புரி அம்மன் தெரு,சுந்தர சோழர் தெரு,தண்டியல் சாவடி தெரு, பரவசிங்க ராஜா தெரு,தெற்கு தெரு,நயினார் குளம், பள்ளிவாசல் தெரு,நயினார் குளம் ரோடு,சுவாமி சன்னதி, டவுண் காவல் நிலையம் ஆகிய பகுதிகளை சைக்கிளில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.உடன் சுகாதார ஆய்வாளர் சிவக்குமார்,வட்டச் செயலாளர்கள் லெனின் சுந்தர்ராஜன்,தகவல் தொழில் நுட்ப அணி காசிமணி,வட்டப் பிரதிநிதி பக்கீர் முகைதீன் பிள்ளை, சத்யா, ஆறுமுகம், லட்சுமணன் உள்பட பலர் சென்றனர்.

# தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கீதாஜீவன் அறிவிப்பு!



தூத்துக்குடி, ஆக. 19- தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் கீதாஜீவன் அறிக்கை வருமாறு:

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க பொது உறுப்பினர் கூட்டம் 24.08.2024 சனிக்கிழமை அன்று 10.00 மணி, கலைஞர் அரங்கம், தூத்துக்குடியில் மாவட்ட அவைத் தலைவர் ஜி.செல்வராஜ், தலைமையில் நடைபெறுகின்றது.

கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக செயல்வீரர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1.கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 16.08.2024 அன்று நடைபெற்ற மாவட்ட கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் - குறித்து

2.கழக வளர்ச்சிப் பணிகள் - குறித்து.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில்

# மாநகரம், ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கழகத்தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்ட அறிவிப்பின்படி கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, கழகத்தின் பவள விழா, முப்பெரும்விழா 2026 தேர்தல்பணி சம்பந்தமாக, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில், மாநகரம், ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் வாரியாக கீழ்க்கண்ட அட்டவணைப்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற உள்ளது.

| நாள் & நேரம் | மாநகரம் / ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் |
|---|---|---|
| 20–08–2024 காலை 11.00 மணி | காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியம் | AJS திருமண மண்டபம் கீழம்பி |
| 23–08–2024 காலை 10.00 மணி | சித்தாமூர் மேற்கு | சக்கரா மண்டபம் கீழ்மருவத்தூர் |
| 24–08–2024 காலை 9.00 மணி | இடைக்கழிநாடு பேரூர் | Medway Mahal, கிளாம்பூர் ECR |
| காலை 11.00 மணி | சித்தாமூர் கிழக்கு | சாய்ராம் திருமண மண்டபம் மண்டபம் ECR கொளத்தூர் |
| 25–08–2024 காலை 10.00 மணி | லத்தூர் தெற்கு | KS மஹால் செய்யூர் |
| காலை 12.00 மணி | மதுராந்தகம் நகரம் | AK திருமண மண்டபம் |
| காலை 2.00 மணி | சாலவாக்கம் ஒன்றியம் | சமுதாய கூடம், பொற்பந்தல் |
| 26–08–2024 காலை 9.00 மணி | லத்தூர் வடக்கு | NKP மஹால் காத்தான்கடை |
| 27–08–2024 காலை 9.00 மணி | திருக்கழுக்குன்றம் தெற்கு | VM மஹால், இளையனார்குப்பம் |
| காலை 12.00 மணி | கருங்குழி பேரூர் | DRR மகால் கருங்குழி |
| 01–09–2024 காலை 9.00 மணி | அச்சரப்பாக்கம் தெற்கு | ஈஸ்வர் மஹால் கடமலைபுத்தூர் |
| காலை 11.00 மணி | அச்சரப்பாக்கம் வடக்கு | RVR மஹால், ராயபுரம் |
| 02–09–2024 காலை 10.00 மணி | வாலாஜாபாத் வடக்கு | வீனஸ் கார்டன் பரந்தூர் |
| 03–09–2024 காலை 9.00 மணி | வாலாஜாபாத் தெற்கு & பேரூர் | உமாசேகர் திருமண மண்டபம், வாலாஜாபாத் |
| காலை 11.00 மணி | காஞ்சிபுரம் தெற்கு | அழகர் மஹால், ஆற்பாக்கம் |
| 04–09–2024 காலை 9.00 மணி | மதுராந்தகம் தெற்கு | AK திருமண மண்டபம், மதுராந்தகம் |
| காலை 11.00 மணி | அச்சரப்பாக்கம் பேரூர் | SMJ திருமண மண்டபம் அச்சரப்பாக்கம் |
| காலை 12.00 மணி | மதுராந்தகம் வடக்கு | ராஜ் மஹால், சாலவாக்கம் கூட்ரோடு |
| 09–09–2024 காலை 9.00 மணி | பகுதி -I காஞ்சிபுரம் நகரம் | கோகுலம் திருமணமண்டபம், பூக்கடைசத்திரம், காஞ்சிபுரம் |
| காலை 11.00 மணி | பகுதி -II காஞ்சிபுரம் நகரம் | கலைவாணி திருமணமண்டபம், டோல்கேட், காஞ்சிபுரம் |
| பிற்பகல் 2.00 மணி | பகுதி -III காஞ்சிபுரம் நகரம் | சாய்மனோன்மணி மண்டபம், அரசு நகர், காஞ்சிபரம். |
| மாலை 4.00 மணி | பகுதி -IV காஞ்சிபுரம் நகரம் | சக்திவேல் திருமணமண்டபம், பி.பாளையம், காஞ்சிபுரம் |
| 10–09–2024 காலை 9.00 மணி | உத்திரமேரூர் ஒன்றியம்/பேரூர் | பிரியா மஹால், மல்லியங்கரணை, உத்திரமேரூர் |
| 12–09–2024 மாலை 4.00 மணி | காஞ்சிபுரம் மாநகரம் | AKG திருமண மண்டபம், காஞ்சிபுரம். |

எனவே சம்பந்தப்பட்ட மாநகரம் / ஒன்றிய / நகர / பகுதி / பேரூர் செயலாளர்கள், முறையாக கூட்ட அழைப்பிதழ்களை அச்சிட்டு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்த பகுதிக்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், கழக அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் பங்கேற்குமாறு கூட்டத்தை ஏற்பாடு செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**க.சுந்தர், எம்.எல்.ஏ.**
செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.